# செய்தி வெளியீடு

## இலங்கையின் தேசிய கணக்குகள் மதிப்பீடுகள்: 2020 முதலாம் காலாண்டு


**தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**
**நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு**

தொ.பே:94-11-2147071 தொ.நகல்:94-11-2877938 மின்னஞ்சல்:national.accounts@statistics.gov.lk


…………………………………………………………………………………………………..

இலங்கையின், 2020 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான (ஜனவரி 1 முதல் மார்ச் 31 வரை) உற்பத்தி அணுகுமுறையால் நடப்பு, நிலையான (2010) விலையில் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியும் (GDP), அது தொடர்பான பொருளாதாரக் குறிகாட்டிகளும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது.

பொருளாதார வீழ்ச்சியின் உலகளாவிய போக்குகளைத் தொடர்ந்து, 2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் சேவைத் துறையைத் தவிர்த்து, இலங்கையின் பொருளாதாரம் சுருங்கியது, சேவைத் துறை தொடர்ந்து 3.1 சதவீதம் விரிவடைந்தது. மீதமுள்ள மூன்று துறைகள், விவசாயம், கைத்தொழில் மற்றும் உற்பத்திப் பொருட்கள் மீதான மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள் ஒட்டுமொத்த பொருளாதார வீழ்ச்சிக்கு பங்களிக்கின்றன. சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு காலத்தில் அதிகபட்ச திறனில் இயங்கும் பொருளாதாரம், முதல் காலாண்டின் முடிவில் ஆரம்பித்த முடக்குதல் நிலைமை காரணமாக உச்ச மட்டத்தில் செயல்படத் தவறியதால், இந்த காலாண்டில், தொற்றுநோயின் தாக்கம் கடுமையாக உணரப்பட்டது. ஆயினும்கூட, பொருளாதாரம் மீதான ஈஸ்டர் தாக்குதல்களின் ஆழமான தாக்கங்கள் பல துறைகளைத் தொடர்ந்து சிக்கலுக்கு முகம் கொடுக்கின்றன. இது அந்தத் துறைகளில் வளர்ச்சி வாய்ப்புகளை கணிசமாகக் குறைத்து, பொருளாதார வீழ்ச்சிக்கு மேலும் பங்களித்தது.

பொதுவாக, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பீடுகளை ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்து 75 நாட்களின் பின் திணைக்கள இணையதளத்தில் வெளியிடுகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தி வெளியிடப்படும் திகதிகள் திணைக்களத்தின் முன்னைய தரவு வெளியீட்டு நாட்காட்டியில் (ADRC) வெளியிடப்படுகிறது. அதன்படி, முதலாம் காலாண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பீடுகளை 2020 ஜூன் 19 அன்று வெளியிட வேண்டும். இருப்பினும், இந்த ஆண்டு, கோவிட் -19 தாக்கத்தின் காரணமாக, நாட்டின் அரச, பகுதி அரச மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து மே மற்றும் ஜூன் மாதங்களில் தரவுகள் மற்றும் தகவல்களை சேகரிப்பதில் பல சிக்கல்களையும் சவால்களையும் எதிர்கொண்டது. அத்துடன், பல நிறுவனங்களின் தரவுகள் கிடைக்கும் தன்மை மற்றும் தரவுகளின் தரம் ஆகியவை அவற்றின் கீழ் மட்ட தரவுகள் செயல்பாட்டு தடைகள் காரணமாக, வழக்கமான தரவுகள் சேகரிப்பு காலத்தின் தருணத்தில் திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை. எனவே, இந்த நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தரவுகளை மேலும் ஆராய்வதற்கும், வழங்கிய தரவு மற்றும் தகவல்களை

சரிபார்க்கவும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் முடிவு செய்தது. இந்த தேவை முதல் காலாண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பீடு வெளியீட்டு தேதியை சில வாரங்களுக்கு ஒத்திவைக்க நேரிட்டது. துல்லியமான மற்றும் தரமான மூல தரவு மற்றும் தகவல்களை சேகரிப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டின் விளைவாக ஏற்பட்ட தாமதம் மிகவும் வருந்தத்தக்கது.

2020 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான தேசிய கணக்கு மதிப்பீடுகள் ஈஸ்டர் தாக்குதல்களின் தொடர்ச்சியான எதிர்மறையான விளைவுகளை பிரதிபலிக்கின்றன, இது 'கோவிட் - 19 தொற்றுநோய்' தொடங்கியதன் ஆழமான தாக்கங்களால் ஒருங்கிணைக்கப்படுகிறது, ஏனெனில் இது சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டில் பொதுவாக எதிர்பார்க்கும் உச்ச வெளியீட்டு நிலைமைகளை பாதித்தது. கோவிட் -19 இன் தாக்கங்கள் 2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் அதிகமாக உணரப்படும், ஆனால் இது இந்த ஆண்டு மார்ச் மாத தொடக்கத்தில் இருந்து நாடு முழுவதும் பரவியது. எவ்வாறாயினும், தொற்றுநோயின் உலகளாவிய தாக்கங்கள் 2019 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில் இருந்து உணரப்பட்டன, இது இலங்கையை பாதிக்கும் முன்பே உலகின் முக்கியமான பகுதிகளை பாதித்தது. இந்த ஆண்டு மார்ச் மாத தொடக்கத்தில் இருந்து நாடு முழுவதும் பரவிய ‘கோவிட் – 19’ தொற்றுநோய்களின் பாதகமான விளைவுகளைப் பிரதிபலிக்கின்றன. ஆகையால், நாட்டின் ஏற்றுமதிக்கான உலகளாவிய தேவை குறைந்தும், சீனா போன்ற நாடுகளிலிருந்து மூலப்பொருட்களை கையகப்படுத்தலில் ஏற்பட்ட தாமதம் மற்றும் பாதுகாப்பற்ற பயணம் மற்றும் அரசாங்கங்கள் விதித்த பயணத் தடைகள் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகையையும் குறைந்தது. இதன் விளைவாக, நாட்டின் பல துறைகள் குறிப்பாக உற்பத்தி, கட்டுமானம், போக்குவரத்து மற்றும் சுற்றுலாத் துறைகள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

2001 ஆம் ஆண்டின் பின்னர் உலக பொருளாதாரத்தில் ஏற்பட்ட மிக மோசமான பொருளாதார அதிர்ச்சி என்று நிபுணர்கள் இதனை அழைக்கின்றனர். இத் தொற்றுநோய் காரணமாக உலகெங்கிலும் உள்ள சில பொருளாதாரங்களிலும் வீழ்ச்சியைக் கண்டுள்ளோம். இதன் தொடராக, இந்த ஆண்டின் முதல் காலாண்டில் இலங்கையும் மிகக் குறைந்த காலாண்டுப் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை (1.6 சதவீத சுருக்கம்) பதிவுசெய்து, விரும்பத்தகாத ஒரு சூழ்நிலையை எதிர்கொண்டது, அதன்படி, கொரோனா வைரஸ் பெருக்கம் எதிர்பாராத வகையில் பொருளாதாரத்தின் பல துறைகளையும் குறிப்பாக, உற்பத்தி, கட்டுமானம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல், மீன்பிடித்தல் போன்ற விவசாயத்தின் சில நடவடிக்கைகள் , சில்லறை வர்த்தகம், சுற்றுலா, மற்றும் தரை, ஆகாய ரீதியான பயணிகள் போக்குவரத்து போன்ற துறைகளைக் பாரதூரமாக பாதித்துள்ளது.

2020 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் தேசிய கணக்குகளின் மதிப்பீடுகள் பற்றிய அறிக்கையை வெளியிடுகையில், 2020 முதலாம் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி மறைவளர்ச்சி வீதமான 1.6 சதவீதம் என மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் ஒப்பீட்டளவில் 2019 ம் ஆண்டின் முதல் காலாண்டில் பதிவு செய்யப்பட்ட நேரான வளர்ச்சி 3.7 சதவீதம் என்றும் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது. 2020 ஆம் ஆண்டு முதலாம் காலாண்டில் நிலையான விலையில் இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி இல. ரூ. 2,292,589 மில்லியன் இது 2019 ஆம் ஆண்டு முதலாம் காலாண்டில் இல. ரூ. 2,330,053 மில்லியன் ஆகும். இருப்பினும், 2020 ஆம் ஆண்டு முதலாம் காலாண்டில் இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி நடப்பு விலையில் இல.ரூ. 3,845,900 மில்லியனாகவும் 2019 ஆம் ஆண்டு முதலாம் காலாண்டில் இல.ரூ. 3,773,551 மில்லியனாகவும் பதிவு செய்து 1.9 சதவீத மாற்றத்தை காட்டுகிறது.

2019 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டு ஒப்பீட்டளவில் சாதாரண காலாண்டாகும், இது உயர் நேர் வளர்ச்சி வீதமான 3.7 சதவீதத்தை பதிவு செய்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணக்கிடுவதில் 2019 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 90 வேலை நாட்களை உள்ளடக்கியது. இருப்பினும், நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் விதிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு காரணமாக, 2020 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டின் கடைசி இரண்டு வாரங்கள், முழு நாட்டின் சாதாரண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதுடன், சில அத்தியாவசிய சேவைகளைத் தவிர முந்தைய ஆண்டைப் போல பொருளாதார நடவடிக்கைகளும் செயல்படவில்லை.

பொருளாதாரத்தின் நான்கு பிரதான பகுதிகளான: விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் மீதான மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள், நடப்பு விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு இக் காலாண்டில் தமது பங்களிப்பினை முறையே 7.3 சதவீதம், 28.4 சதவீதம், 58.3 சதவீதம் மற்றும் 6.0 சதவீதம் பங்களிப்பு செய்துள்ளன. கோவிட் - 19 பரவலின் விளைவாக, பொருளாதாரத்தின் பல பிரிவுகள் பெரும் பாதிப்பைச் சந்தித்தன. இது நாட்டின் பொருளாதார செயல்திறனை மெதுவாக்கியது. அதன்படி, 2020 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பீடுகளில் விவசாயம் மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகள் முறையே 5.6 சதவீதம் மற்றும் 7.8 சதவீதம் சுருங்கியுள்ளன. இருப்பினும், முதல் காலாண்டில் சேவை நடவடிக்கைகள் தொடர்ந்து 3.1 சதவீதம் விரிவடைந்தன.

## விவசாயத்துறை

விவசாய துறையின் நடவடிக்கைகளில் ஏற்பட்ட சுருக்கத்துக்கு முக்கிய காரணமாக அமைவன ‘கடல் மீன்பிடி’ (8.1 சதவீதம்), ‘எண்ணைப்பசை கொண்ட பழவகைகளின் வளர்ச்சி தேங்காய் உள்ளடங்கலாக’ (12.8 சதவீதம்), ‘தேயிலை வளர்ச்சி’ (27.5 சதவீதம்), ‘இறப்பர் வளர்ச்சி’ (8.7 சதவீதம்), ‘வனவியல் மற்றும் மரம் வெட்டல்’ (13.3 சதவீதம்) ஆகியனவாகும். இந்த நடவடிக்கைகள் முந்திய ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2020 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் கணிசமான சுருக்கத்தைக் கண்டுள்ளன. ஆயினும்கூட, 'தானியங்கள் வளர்ச்சி’ (12.9 சதவீதம்), 'நெல் வளர்ச்சி’ (4.1 சதவீதம்), 'காய்கறி வளர்ச்சி’ (5.0 சதவீதம்), 'பழங்கள் வளர்ச்சி’ (7.4 சதவீதம்), 'வாசனைத் திரவியங்கள் வளர்ச்சி’(1.5 சதவீதம்) மற்றும் 'விலங்கு உற்பத்தி' (0.4 சதவீதம்) ஆகிய நடவடிக்கைகள் மேலும் விரிவடைந்தன.

## கைத்தொழில்த்துறை

2020 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில், கோவிட் - 19 பரம்பல் காரணமாக ஒட்டுமொத்த கைத்தொழில்துறை நடவடிக்கைகளும் 7.8 சதவீதம் சுருங்கியது. இலங்கையின் ஒட்டுமொத்த உற்பத்தித் துறையும் 2020 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 4.1 சதவீத சுருக்கத்தையே சந்தித்தது. இதற்கு காரணம் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிற்கு ஆடை, தேயிலை மற்றும் இறப்பர் தயாரிப்புகளுக்கான ஏற்றுமதி கோரிக்கை குறைக்கப்பட்டதாலும், அனைத்து மாவட்டங்களிலும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால் உற்பத்தி நிறுத்தப்பட்டதாலும், மார்ச் கடைசி இரண்டு வாரங்களில் இருந்து சீனாவிலிருந்து மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதில் தாமதம் ஏற்பட்டதாலும் ஆகும். உற்பத்தி நடவடிக்கைகளில் முக்கியமாக சுருக்கம் ‘புடவை உற்பத்தி, ஆடை மற்றும் தோல் தொடர்பான தயாரிப்பு’ செயல்பாட்டால் ஏற்பட்டுள்ளது, இது இந்த காலாண்டில் 13.6 சதவீத மறை வளர்ச்சியை பதிவு செய்தது. மேலும், ‘கோக் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலிய பொருட்களின் உற்பத்தி’ (19.2 சதவீதம்), ‘இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி’ (11.6

சதவீதம்) மற்றும் 'இரசாயன பொருட்கள் மற்றும் அடிப்படை மருந்து பொருட்களின் உற்பத்தி'(10.1 சதவீதம்) ஆகியவை மறை வளர்ச்சி வீதங்களை அறிவித்துள்ளன. இதற்கிடையில், நாட்டின் கைத்தொழில்துறையில் அதிக பங்களிப்பு செய்யும் 'உணவு, பானம் மற்றும் புகையிலை பொருட்களின் உற்பத்தி' நடவடிக்கை 2020 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 2.8 சதவீத நேர்வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.

கைத்தொழில் துறை நடவடிக்கைகள்' மத்தியில், கைத்தொழில் துறையில் 6.4 சதவீத பங்குகளை ஒத்திருக்கும் 'கட்டுமான' செயல்பாடு, இந்த காலாண்டில் கணிசமான சுருக்கத்தை 16.0 சதவீதம் பதிவு செய்துள்ளது, அந்தத் தொழிலில் கோவிட் - 19 தொற்றுநோயின் பெரும் தாக்கத்தைக் காட்டுகிறது. கட்டுமான நடவடிக்கைகளில் ஏற்பட்ட சரிவைத் தொடர்ந்து, 2020 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 'சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் ' செயல்பாடும் எதிர் வளர்ச்சி வீதமாக18.3 சதவீதமாக பதிவு செய்தது. இதற்கிடையில் 'மின்வலு, வாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் செயற்பாடு', ' நீர் சேகரிப்பு , சுத்திகரிப்பு மற்றும் வழங்கல்' நடவடிக்கைகள் முறையே இந்த காலாண்டில் 2.3 சதவீத மற்றும் 5.0 சதவீத நேர் வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளன.

## சேவைத்துறை

2020 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில், சேவைத் துறையின் செயல்திறன் மிகவும் திருப்திகரமாக உள்ளது. இத் தொற்றுநோய்க்கு மத்தியிலும் இத் துறை 3.1 சதவீத விரிவாக்கத்தை பதிவு செய்துள்ளது. இத் துறை முக்கியமாக பின்வரும் துணை நடவடிக்கைகளால், 'மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்' (4.1சதவீதம்), 'தொலைத்தொடர்பு' (15.2 சதவீதம்), 'தகவல் தொழில்நுட்ப நிரலாக்க ஆலோசனை மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள்' (9.6 சதவீதம்), 'நிதி சேவை நடவடிக்கைகள்' (9.0 சதவீதம்) மற்றும் 'பிற தனிப்பட்ட சேவைகள்' (3.4 சதவீதம்) நேர் வளர்ச்சி வீதங்களுடன் 2019 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டோடு ஒப்பிடும்போது சிறப்பாக ஆதரிக்கப்பட்டுள்ளது. கோவிட் 19 -தொற்றுநோயின் மோசமான விளைவு காரணமாக, 'தங்குமிடம், உணவு மற்றும் பானங்கள் சேவை நடவடிக்கைகளில் 6.2 சதவீத குறிப்பிடத்தக்க சுருக்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது. 'பொருட்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்து' நடவடிக்கை இந்த காலாண்டில் 0.1 சதவீதம் சுருங்கியுள்ளது.

2020 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலும் விரிவான விபரங்கள் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம் www.statistics.gov.lk (http://203.94.94.89/mainsite/NationalAccounts/StaticalInformation.

கலாநிதி. ஐ.ஆர். பண்டார

**பணிப்பாளர் நாயகம்**